சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 01.10.2024

ம.சா.1– ஐஸ்வர்யா த/பெ – நாகூர்முத்து

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

எங்கள் திருமணம் காதல் திருமணமாகும். எங்களுக்கு 17.04.2019 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. நான் 16.03.2019 ம் தேதியன்று அருப்புக்கோட்டை மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனுவில் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டோம் என்று புகார் கொடுத்தேன். நாங்கள் இருவரும் 16.03.2019 ம் தேதி திருமணம் செய்து கொண்டதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது மனுவில் 16.03.2019 ல் திருமணம் செய்து கொண்டதாக பொய்யாக கூறி புகார் கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. எங்களது திருமணம் எனது பெற்றோருக்கு ஆரம்பத்தில் இருந்தே பிடிக்கவில்லை என்று சொன்னால் ஆரம்பத்தில் பிடிக்கவில்லை, பின்னர் கோவிலில் வைத்து திருமணம் செய்த போது அவர்கள் சம்மதத்தின் பேரில் திருமணம் செய்து கொண்டோம். நான் புகார் மனு மீதான விசாரணைக்கு எனது தகப்பனார் மட்டும் வந்திருந்தார். அந்த விசாரணையில் எனது தகப்பனார் தனக்கு சம்மதம் இல்லை என்று எழுதிக்கொடுத்தாரா என்றால் எங்களுக்கு எனது சமுதாய முறைப்படி திருமணம் செய்து வைப்பதாக எழுதிக்கொடுத்தார். நான் 16.03.2019 ல் திருமணம் செய்து கொண்டதாக பொய் கூறி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 16.03.2019 ல் திருமணம் நடந்தது, ஆனால் 17.04.2019 ல்

அனைவரும் அறிய கோவிலில் வைத்து திருமணம் செய்தோம். எனது கணவரின் சகோதரிக்கு குழந்தை பிறந்ததால் அவருக்கு செய்முறை செய்ய வேண்டும் என்று என்னிடம் நகை கேட்டு அடித்தார். எனது கணவர் அடித்த பின்னர் அருகில் உள்ளவர்கள் அதை பார்த்து எனது பெற்றோருக்கு தகவல் சொன்னதாக மனுவில் சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் 17.12.2021ல் இறந்தார். திருமணத்தின் போது போடப்பட்ட நகைகள் தற்போது எதிர்மனுதாரர் வசம் உள்ளது. நானும், எதிர்மனுதாரரும் கடந்த 16.10.2021ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனது குழந்தைக்கு தற்போது வயது 3.1/2. எனது குழந்தை விருதுநகர், அரசு பள்ளியில் படிக்கிறார். நான் தற்போது க.எண்.16, சங்கரன் கிணற்று தெரு, விருதுநகர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலம் பாரா-7ல் எதிர்மனுதார் என்னை சாதியை கூறி திட்டியதாக சொல்லியுள்ளேன். எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பொய்யான சங்கதிகளை கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் அசல் ஆவணங்கள் அனைத்தும் என் வசம் தான் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.